இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 08 | திகதி : 07.07.2024 | விலை : 50.00

# புனித மரியன்னை பிறர் மையப்பட்ட வாழ்வை மேல்வரிச்சட்டமாகக் கொண்டு வாழ்ந்தார்

## மருதமடு அன்னையின் முடிசூட்டு நூற்றாண்டு விழா திருப்பலியில் யாழ் ஆயர்.



மருதமடு அன்னையின் முடிசூட்டு நூற்றாண்டு விழாத் திருப்பலி யூலை மாதம் 2ம் திகதி மடுத்திருப்பதியில் நடைபெற்றது. கொழும்பு உயர் மறை மாவட்டப் பேராயர் கருதினால் மல்கம் இரஞ்சித் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இவ்விழாத் திருப்பலியில் தமிழ்மொழியில் மறையுரையாற்றிய போதே யாழ் ஆயர் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆயர் அவர்கள் தமது மறையுரையில் மேலும் கூறுகையில்: மரியன்னை தன்னலம் கருதாது பிறர் தேவைகளை உய்த்துணர்ந்து பிறர் துயரில் தன்னை அர்ப்பணித்தார். இறைவனுக்கு என்றும் பிரமாணிக்கமான வாழ்வை வாழ்ந்தமையே அவர் இறைவனின் தாயாகும் வாய்ப்புப் பெறக் காரணமாயிற்று. நாமும் அத்தகைய வாழ்வு வாழவேண்டும் என்பதே மருதமடு அன்னை இன்று எமக்கு விடுக்கும் அழைப்பாகும் எனக் குறிப்பிட்டார்.

இவ்விழாத் திருப்பலியில் இலங்கை ஆயர் பேரவையின் தலைவர் பேரருட்கலாநிதி ஹரல்ட் அன்ரனி பெரேரா உட்பட பல ஆயர்கள், துணை ஆயர்கள், ஓய்வுநிலை ஆயர்கள் அடங்கலாக குருக்கள், கன்னியர், இறைமக்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்று இறை ஆசீர் பெற்றனர். மருதமடு அன்னைக்கு முடி சூட்டப்பட்டதன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இலங்கை அஞ்சல் திணைக்களத்தினால் மருதமடு அன்னையின் ப.2



# யாழ் பேராலயத்திற்கு மூன்று புதிய நற்கருணைப் பணியாளர்கள்



யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்திற்கென மூன்று நற்கருணைப் பணியாளர்களை யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டனர். புதிய நற்கருணைப் பணியாளர்களையும் அன்போடும் இறையாசீரோடும் மகிழ்வோடும் வரவேற்கிறோம். இந்த சிறப்புத் திருப்பலியைத் தலைமையேற்று ஒப்புக் கொடுத்த ஆயருக்கும் புதிய நற்கருணைப் பணியாளர்களை ஆன்மீக ரீதியில் உருவாக்க முன்னின்று உழைத்த யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அடிகள் யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள், அருட்தந்தை தே.செல்வரட்ணம் அவர்கள், அருட்தந்தை ப.இருதயதாஸ் அவர்கள்,அருட்தந்தை ஸ்ரனி அன்ரனி அமதி அவர்கள் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

# புன்னாலைக்கட்டுவன் ஆலய நூற்றாண்டு விழா



புன்னாலைக்கட்டுவன் புனித இராயப்பர் ஆலயத்தின் நூற்றாண்டு விழாவும் ஆலய வருடாந்தத் திருவிழாவும் பங்குத்தந்தை அருட்தந்தை இராஜசிங்கம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் 29ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்றுவந்த நிலையில் 28ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழா திருப்பலியின் ஆரம்பத்தில் ஆலய வளாகத்தின் முன்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த புனித இராயப்பர் வரவேற்பு ச்சுருபம் ஆயர் அவர்களினால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்பட்டது. திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து ஆலய நூற்றாண்டு விழா நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக நூற்றாண்டுவிழா நினைவு மலர் வெளியீடு இடம்பெற்றதுடன் நிகழ்வுகளின் இறுதியில் புதிய ஆலயத்திற்கான அடிக்கல்லும் ஆயர் அவர்களால் நாட்டிவைக்கப்பட்டது.

# இரு மூத்த குருக்கள் மறைவு

பிறப்பு 12 . 11 . 1948 — இறப்பு 11 . 06 . 2024



அமரர்

**அருட்தந்தை. ரேஜீஸ் இராஜநாயகம்**

குருவாக - 16.05.1973

யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் ரேஜீஸ் இராஜநாயகம் அடிகளார் கடந்த 11.06.2024 அன்று காலமானார். யாழ். சவேரியார் குருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளராகவும் யாழ். பல்கலைக்கழகத்தின் ஆன்மீகக் குருவாகவும் கடந்த காலங்களில் அரும்பணியாற்றியிருந்த இறைபணியாளர் இவர் கண்டிப்பு கலந்த நகைச்சுவை உணர்வோடு உரையாடிப் பலரை மகிழச் செய்பவர். மன்னார் மறைமாவட்டத்தின் விடத்தல்தீவுப் பங்குத்தந்தையாக இவர் பணியாற்றியிருந்தார். 13.06.2024 அன்று யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு யாழ். கொஞ்சேசஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெற்றது. அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை இறைஞ்சுவதோடு குடும்ப உறவுகளுக்கு பாதுகாவலன் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

பிறப்பு 11 . 01 . 1936 — இறப்பு 11 . 06 . 2024



அமரர்

**அருட்பணி. பேதுரு பிலிப் பெர்னான்டோ அ.ம.தி**

முதல் அர்ப்பணம் - 15.08.1955
நித்திய அர்ப்பணம் - 15.08.1958
குருவாக - 13.04.1962

அமலமரித் தியாகிகளின் யாழ். மாகாணத்தைச் சேர்ந்த மூத்த குருக்களில் ஒருவராகிய அருட்பணி P.P. பிலிப் அமதி அடிகளார் கடந்த11.06.2024 அன்று தனது 85வது வயதில் காலமானார். அமைதியான இனிய சுபாவமுடைய இவ்வருட்பணியாளர் மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலைப் பங்கில் பங்குத்தந்தையாக பணியாற்றி இருந்தார் என்பது நினைவுகூரத்தக்கது. பலகுருக்கள் துறவிகளுக்கு ஆன்மீக வழிகாட்டும் பணியையும் இவர் மேற்கொண்டிருந்தார். இவருக்கான இறுதி இரங்கல் திருப்பலி 12.06.2024 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் யாழ். மரியன்னை பேராலயத்தில் இடம்பெற்று. யாழ். கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெற்றது. இறப்பெய்திய அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை இறைஞ்சுவதோடு அமலமரித் தியாகிகள் சபையினருக்கும் பாதுகாவலன் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

# கல்வி வெளியீட்டுப் பிரிவின் பணிப்பாளராகக் திரு. ஜோண் குயின்ரஸ்



கல்வி அமைச்சின் வெளியீட்டுப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக திரு. ஜோண் குயின்ரஸ் ஆடி மாதம் 5ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னதாக, ஜோண் குயின்ரஸ் அவர்கள் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி வந்தவராவார்.

1986 ஆம் ஆண்டு ஆசிரியராக அரச சேவையில் இணைந்த இவர், அதிபர்,ஆசிரியர், கலாசாலை விரிவுரையாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் பணி சிறக்க இறையாசீர் வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# குருத்துவத்தில் இடைக்கால பணிநீக்கம்

யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க குருக்களாகிய அருட்பணி T.யூட்தாஸ், அருட்பணி றெனால்ட் ஜோர்ஜ் ஆகிய இரு குருக்களுக்கும் குருத்துவத்தில் இடைக்காலப் பணி நீக்கம் 2024 யூன் 17ம் திகதி முதல் ஈராண்டுகாலப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இறைமக்களாகிய உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

திருஅவையின் சட்டத்தொகுப்புக்கு அமைவாக இவர்கள் இருவரும் திருப்பலி நிறைவேற்றுதல், திருவருட்சாதனங்களை வழங்குதல், திருவழிபாடுகளை வழிநடத்துதல், குருத்துவ ஆடைகளை அணிதல், குருமனைகளில் வசித்தல் மற்றும் குருக்களுக்கான சிறப்புரிமைகளைப் பயன்படுத்தல் போன்ற விடயங்களை மேற்கொள்ள முடியாது என்பதையும் இத்தால் அறியத்தருகின்றோம்.

பேரருட்கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம்
யாழ் ஆயர்

அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம்
குருமுதல்வர்

# யாழ். மறைமாவட்ட குருக்கள் சிலருக்கான பணிமாற்றங்கள்

யாழ். ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றும் மறைமாவட்டக் குருக்கள் சிலருக்கு பணிமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் இம்மாற்றங்கள் நடைமுறைக்கு வருகின்றன. பணிமாற்றம் பெறும் குருக்களின் விபரங்கள் வருமாறு:

**மறைக்கோட்ட முதல்வர்களாக:**

| | |
|---|---|
| அருட்பணி M.ஜெறோ செல்வநாயகம் | - யாழ். மறைக்கோட்டம் |
| அருட்பணி A.F.பெனட் | - கிளிநொச்சி மறைக்கோட்டம் |
| அருட்பணி T.J. கிருபாகரன் | - பருத்தித்துறை மறைக்கோட்டம் |

| | |
|---|---|
| அருட்பணி J.J.மவுலிஸ் | - பங்குத்தந்தை - கொழும்புத்துறை |
| அருட்பணி J.A. ஜேசுதாஸ் | - பரிபாலகர் பற்றிமா அன்னை யாத்திரைத்தலம் பண்டத்தரிப்பு |
| அருட்பணி M.ஜெறோ செல்வநாயகம் | - பங்குத்தந்தை - யாழ். மரியன்னை பேராலயம் |
| அருட்பணி S.L. மொன்பேட் | - பங்குத்தந்தை - புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், நல்லூர் |
| அருட்பணி ஜேக்கப் நிக்கலஸ் | - அடைக்கல அன்னை ஆலயம் - யாழ்ப்பாணம் |
| அருட்பணி S.J.Q.ஜெயரஞ்சன் | - பங்குத்தந்தை - மிருசுவில் |
| அருட்பணி S.அலின் கருணாகரன் | - பங்குத்தந்தை - கோப்பாய் |
| அருட்பணி அன்ரனி பாலா | - பங்குத்தந்தை - திருநெல்வேலி |
| அருட்பணி A.F.பெனட் | - பங்குத்தந்தை - பரந்தன் |
| அருட்பணி C. ஜஸ்ரின் | - பங்குத்தந்தை - ஊர்காவற்துறை |
| அருட்பணி G.ஞானரூபன் | - பங்குத்தந்தை - மாரீசன்கூடல் |
| அருட்பணி டியூக் வின்சென்ட் | - இயக்குநர் - மறைக்கல்வி நடுநிலையம், யாழ்ப்பாணம் |
| அருட்பணி R.H.சகாயநாயகம் | - பங்குத்தந்தை - புனித யுவானியார் ஆலயம் , சுண்டுக்குளி |
| அருட்பணி A. அருள் போல் அனக்கிளிற் | - உயர்கல்வி - இந்தியா |
| அருட்பணி X.W. ஜேம்ஸ் | - பங்குத்தந்தை - பாசையூர் |
| அருட்பணி A.P.தயாபரன் | - அதிபர் - புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி |
| அருட்பணி G.விஜின்ரஸ் | - பங்குத்தந்தை - கரவெட்டி |
| அருட்பணி றெனால்ட் | - பதில் பங்குத்தந்தை - சுன்னாகம் |
| அருட்பணி A.யஸ்ரின் | - பங்குத்தந்தை - தாழையடி |
| அருட்பணி T.J. கிருபாகரன் | - பங்குத்தந்தை - பருத்தித்துறை |
| அருட்பணி M.M.H.ஞானேந்திரன் | - பங்குத்தந்தை - சாவகச்சேரி |
| அருட்பணி ஜோண் கனீசியஸ் | - பதில் பங்குத்தந்தை - உருத்திரபுரம் |
| அருட்பணி P.A.கமல்ராஜ் | - உதவிப்பங்குத்தந்தை - மரியன்னை பேராலயம் |
| அருட்பணி J.அன்ரன் கஜிஸ்காந் | - உதவிப்பங்குத்தந்தை - குருநகர் |

## புனித மரியன்னை பிறர் மையப்பட்ட வாழ்வை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருவுருவத்துடன் அஞ்சல் முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது. மருதமடு அன்னைக்கு முடிசூட்டப்பட்டதன் நினைவாக நூற்றாண்டு மலரொன்று மன்னார் மறை மாவட்டத்தினால் வெளியிடப்பட்டவை குறிப்பிடத்தக்கது.

மருதமடுத் திருத்தலம் மறுசீரமைக்கப்பட்டு புதிய குவிமாடம் (டோம்) அமைக்கப்பட்டு இத்திருவிழாவின் போது கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கருதினால் மல்கம் இரஞ்சித் ஆண்டகை அவர்களினால் ஆசீர்வதித்து திறந்து வைக்கப்பட்டது.


## மலிவு விலையில் பரிசுத்த வேதாகமம்

புனித வளன் கத்தோலிக் அச்சகத்தில் பரிசுத்த வேதாகமம் ரூபா 1750/= இற்கு விற்பனைக்கு உண்டு.

சகாய விலையில் விற்பனை செய்வதால் கூடுதல் எண்ணிக்கையில் வாங்க விரும்புபவர்கள் பங்குத்தந்தையின் சிபாரிசுடனேயே பெற்றுக் கொள்ளலாம்

முகாமையாளர்


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 09 . 1938



உதிர்வு 14 . 07 . 2020

**அருட்பணி R.M.G. நேசநாயகம்**

"சீவியத்தில் நேசித்தவர்களை மரணத்தில் மறவாதீர்கள்"
அனுதினமும் அகம் விட்டகலா நினைவின் வண்ணங்கள்
ஆண்டுகள் நான்கு அகன்றாலும் அகலாத எம் எண்ணங்கள்!
ஆண்டுகள் நீளலாம் ஆனால் உங்கள் நினைவுகள் நீங்காது..
இன்று நீங்கள் எம்மோடு இல்லை ஆனாலும்
நீங்கள் காட்டிய இறை பாதையில் தான் நாம் பயணிக்கின்றோம்!
மண்ணோடு மறையும் காலம் வரை எம்
நெஞ்சோடு இருக்கும் உங்கள் நினைவுகள்!
உங்கள் ஆத்மா இறைவனில் இறைப்பாறட்டும்...

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

கோவிலம்மா குடும்பத்தினர்

## 20வது ஆண்டு நினைவு

மலர்வு 12 . 06 . 1932



உதிர்வு 13 . 07 . 2004

**அருட்பணி அன்ரன் இராஜநாயகம்**

ஈர் பத்தாண்டுகள் சென்றாலும்
ஊர் உயர் நீராற்றிய
இறைபணியும் கல்விப் பணியும்
நீங்கா நினைவுகளாய்
எம் இதயத்தில் இன்றும்
நிலைத்து நிற்கின்றன

நீங்கா நினைவுகளுடன்
அருட்பணி எஸ்.ஏ.ஜோர்ஜ்

# கரித்தாஸ் கியூடெக் - யாழ்ப்பாணம் தவக்கால நிதி சேகரிப்பு - 2024

| இல. | பங்கு | தொகை |
|---|---|---|
| 1 | அஞ்சனந்தாழ்வு | 5,600.00 |
| 2 | சுண்டுக்குழி | 15,655.00 |
| 3 | புனித.திரேசா ஆலயம், யாழ்ப்பாணம். | 11,350.00 |
| 4 | கோப்பாய் | 18,335.00 |
| 5 | கொக்கிளாய் | 2,030.00 |
| 6 | உடுப்புக்குளம் | 7,070.00 |
| 7 | அளம்பில் | 20,000.00 |
| 8 | திருநெல்வேலி | 19,290.00 |
| 9 | சில்லாலை | 12,350.00 |
| 10 | கட்டைக்காடு | 20,870.00 |
| 11 | மாரீசன்கூடல் | 20,000.00 |
| 12 | அடைக்கல அன்னை ஆலயம், யாழ்ப்பாணம். | 23,750.00 |
| 13 | மாதகல் | 15,600.00 |
| 14 | சுன்னாகம் | 35,000.00 |
| 15 | ஊறணி, கே.கே.எஸ் | 12,700.00 |
| 16 | எழுவைதீவு | 10,940.00 |
| 17 | ஒட்டகப்புலம் | 25,000.00 |
| 18 | மணற்காடு | 16,000.00 |
| 19 | புங்குடுதீவு | 4,000.00 |
| 20 | அல்லைப்பிட்டி | 39,490.00 |
| 21 | பண்டத்தரிப்பு | 22,000.00 |
| 22 | பாண்டியந்தாழ்வு | 11,000.00 |
| 23 | மண்டைதீவு | 11,570.00 |
| 24 | சாட்டி | 26,800.00 |
| 25 | மிருசுவில் | 45,000.00 |
| 26 | புதுக்குடியிருப்பு | 42,200.00 |
| 27 | புனித.அன்னாள் ஆலயம், இளவாலை | 22,860.00 |
| 28 | நாவாந்துறை | 89,550.00 |
| 29 | உருத்திரபுரம் | 6,100.00 |
| 30 | கொய்யாத்தோட்டம். | 10,200.00 |
| 31 | பெரியவிளான், இளவாலை | 17,000.00 |
| 32 | கரவெட்டி | 17,000.00 |
| 33 | கிளிநொச்சி | 12,000.00 |
| 34 | மானிப்பாய் | 346,000.00 |
| 35 | கொழும்புத்துறை | 40,000.00 |
| 36 | ஊர்காவற்றுறை | 52,000.00 |
| 37 | பரந்தன் | 12,000.00 |
| 38 | பருத்தித்துறை | 72,000.00 |
| 39 | பளை | 20,000.00 |
| 40 | பேராலயம், யாழ்ப்பாணம். | 125,000.00 |
| 41 | குருநகர் | 127,000.00 |
| 42 | சக்கோட்டை | 14,140.00 |
| 43 | சாவகச்சேரி | 27,500.00 |
| 44 | உரும்பிராய் | 114,700.00 |
| 45 | பாசையூர் | 104,000.00 |
| 46 | அச்சுவேலி | 11,000.00 |
| 47 | நவாலி | 32,750.00 |
| 48 | நெடுந்தீவு | 13,000.00 |
| 49 | புனித யாகப்பர் ஆலயம், இளவாலை | 8,200.00 |
| 50 | கரம்பன் | 6,000.00 |
| 51 | முழங்காவில் | 10,500.00 |
| 52 | முல்லைத்தீவு | 21,000.00 |
| 53 | மல்லாவி | 4,200.00 |
| 54 | மாங்குளம் | 5,000.00 |
| 55 | இரணைப்பாலை | 8,500.00 |
| 56 | உடையார்கட்டு | 3,000.00 |
| 57 | பூநகரி | 12,500.00 |
| 58 | வட்டக்கச்சி | 4,500.00 |
| 59 | வலைப்பாடு | 33,550.00 |
| 60 | குளமங்கால் | 21,000.00 |
| 61 | குமுழமுனை | 7,500.00 |
| 62 | உடுவில் | 25,000.00 |
| 63 | ஆனைக்கோட்டை | 10,000.00 |
| 64 | கூழாமுறிப்பு | 20,000.00 |
| | **மொத்தம்** | **1,679,850.00** |

# அன்பின் மகிழ்வு




**உங்கள் பிள்ளைகள் குடும்பத்தின் ஒலிவக் கன்றுகள்**

திருப்பாடல் 128 இல் வரும் உருவகத்தில் கணவனும், மனைவியும் அமர்ந்து இருக்க அவர்களைச் சூழ்ந்து பிள்ளைகள் இருக்கும் நம்மிய மான காட்சியை மீண்டும் மனங்களுக்குக் கொண்டு வந்து, குழந்தைகளை "ஒலிவக் கன்றுகள்" என்று திருப்பாடல் அழைக்கின்றது. அதாவது இந்தக் குடும்பத்தில் பிள்ளைகள் உயிர்த்துடிப்பும் ஆற்றல்களும் நிறைந்தவர்களாக இருப்பர்.

குடும்பத்தில் பிள்ளைகள் இறைவனின் உன்னதமான கொடைகளாகும். குழந்தைகள் இந்த உலகில் கடவுளின் அழகை வெளிப்படுத்துபவர்கள். "குழந்தைகளே குடும்பத்துக்கு இறைவன் அளிக்கும் மிகப்பெரும் கொடையாகும்" என்று அன்னை திரேசா குறிப்பிடுகின்றார்.

எனவே தான் பெற்றோர்கள் ஒரு குடும்பத்தில் அடித்தளங்கள் என்றால் குழந்தைகள் அதன் உயிருள்ள கற்கள் போன்றவை என்று திருவிவிலியம் வர்ணிக்கின்றது. (1பேதுரு 2:5)

பிள்ளைகள் பற்றிப் பேசும் போது திருவிவிலியம் கட்டி எழுப்பு என்ற வினைச் சொல்லுடன் இணைத்துப் பேசுகின்றது. "ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லை எனில், அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்" பிள்ளைகளைக் கட்டி எழுப்புவதற்கு ஒப்பாகும் வகையில் பிள்ளைகளைக் கட்டி எழுப்புபவர் கடவுளேயாவர். எனவே பிள்ளைகள் இறை நம்பிக்கையில் வளர வேண்டும்.

ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் மிகப் பெரும் சொத்தாகக் கருத வேண்டும். ஏனெனில் "பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்". "மக்கட்பேறு" அவர் அளிக்கும் 'பரிசில்'. எனவே கடவுள் ஓர் தம்பதிகளுக்கு அருளும் மிகப்பெரும் செல்வம் பிள்ளைகளாகும். எனவே தான் வேதாகமம் பிள்ளைகளைப் பற்றி இவ்வாறு கூறுகின்றது. "மக்கட்பேறு, அவர் அளிக்கும் பரிசில்". "இளமையில் ஒருவருக்கும் பிறக்கும் மைந்தர் வீரரின் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பானவர்". அவற்றால் தம் அம்பறாத் துணியை நிரப்பிய வீரர் நற்பேறு பெற்றோர். நீதிமன்றத்தில் எதிரிகளோடு வழக்காடும் போது அவர் இகழ்ச்சியடைய மாட்டார். (திரு.27:1, 3- 5)

எனவே இறைவன் நம் குடும்பத்துக்கு அருளிய அருளும் பிள்ளைகளைப் பெரும் பொக்கிஷங்களாகக் கருதுவோம். அவர்களை உருவாக்குவோம். இறைவன் தந்த பரிசுத்தமான பிள்ளைகளைப் புனிதமாக வளர்த்து புனிதமாகவே இறைவனிடம் ஒப்படைக்க முயற்சிப்போம். எம் பிள்ளைகளுக்காக அனுதினமும் நன்றி கூறி அவர்களுக்காக செபிப்போம்.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

# யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தின் "நம்பிக்கையின் திருப்பயணிகள்" புனித யாத்திரை

The Jaffna Diocesan Laity Council

கிறிஸ்து பிறப்பின் 2025 ஆம் ஆண்டு யூபிலியை முன்னிட்டு இறைவேண்டல் ஆண்டாகப் பிரகடனப்படுத் தப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டில் ஆறு மறைக் கோட்டங்களை உள்ளடக்கிய யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தின் ஏற்பாட்டில் புனித கன்னிமரியாவின் பெயர் கொண்ட ஏழு திருத்தலங்களைத் தரிசிப்பதற்கான ஓர் புனித யாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. யாழ். திரு அவையின் பொது நிலைப்பணியாளர் செபத்தில் நிலைத்திருக்கவும் விசுவாசத் தில் ஆழப்படவும் நம்பிக்கையின் திருப்பயணிகளாவோம் என்னும் தொனிப்பொருளில் யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அடிகளாரின் திட்டமிடலுடன் 2024.06.17 அன்று இந்த யாத்திரை யாழ் பேராலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

ஆறு மறைக்கோட்டங்களிலிருந்தும் பொது நிலையினர் கழகத்தின் நூற்றியிருபது பேர் வரையான உறுப்பினர்கள் வந்து இந்த யாத்திரையில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். முந்தைய காலங்களில் விசுவாசிகள் குழுவாக கூடி ஏழு திருத்தலங்களை யாத்திரையாக சென்று தரிசிப்பது கத்தோலிக்க திருச்சபையில் காணப்பட்ட ஓர் பாரம்பரியமாக இருந்தது. இன்று பல்வேறு பங்குகள் அல்லது ஆலயங்களைச் சேர்ந்த விசுவாசிகள் இவ்வாறு ஒன்றாகக்கூடி யாத்திரை செய்வதென்பது மறக்கப்பட்ட அல்லது முடியாத வியமொன்றாகி விட்டது. இந்நிலையில் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த விசுவாசிகளை ஒன்றாக இணைத்து "இணைந்து பயணிக்கும் கூட்டொருங்கியக்கத் திருஅவையாக" வழிநடத்தியமை யாழ் மறை மாவட்டப் பொது நிலையினர் கழக செயற்பாட்டில் ஓர் முக்கிய மைல்கல்லாகும்.

ஒவ்வொரு ஆலயத்திலும் பின்பற்றவேண்டிய பக்திச் செயற்பாடுகள் மற்றும் நேர முகாமைத்துவம் என்பன சிறப்பாகத் திட்டமிடப்பட்டு அருட்தந்தை இருதயதாஸ் அவர்களின் ஆன்மீக வழிநடத்தலுடன் அருட்தந்தை மௌலிஸ் அடிகளார் தலைமையில் யாத்திரை ஆரம்பமாகியது.

முதல் திருத்தலமாக யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் அனைவரும் கூடி இறையாசீர் வேண்டி திருச்செபமாலை பிரார்த்தனையில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளாரினால் ஒரு சிறிய ஆசியுரை வழங்கப்பட்டது. அவர் தனதுரையில் யாழ் மறைமாவட்டத்தின் பல பங்குகளிலுமிருந்து மக்கள் கூடி இவ்வாறுஏழு ஆலயங்களைத் தரி சிக்க புனித யாத்திரையை மேற்கொள்வது எமது மறை மாவட்ட வரலாற்றில் முதன் முதலாக மேற்கொள்ளப்படும் ஒரு நிகழ்வாகும் எனப் பெருமையுடன் கூறினார். தொடர்ந்து அவரின் சிறிய செபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் யாத்திரை ஆரம்பமானது.

இரண்டாவது திருத்தலமாக சாட்டி புனித சிந்தாத்திரை மாதா திருத்தலத்தில் நற்கருணை வழிபாடும் ஆசீர்வாதமும் சாட்டிப் பங்குத்தந்தை அருட்பணி ஜெகன்குமார் அடிகளாரால் நிறைவேற்றப்பட்டது. அவர் தனது சிறிய மறையுரையில் கத்தோலிக்க மக்களின் வழிபாடுகளும் செயற்பாடுகளும் கண்களுக்குக் களிப்பூட்டும் நிகழ்வாக இல்லாமல் உள்ளத்திற்கு ஆன்மீக வலுவூட்டும் நிகழ்வாக அமைய வேண்டுமென அறிவுறுத்தினார்.

தொடர்ந்து சின்னமடு புனித செபமாலை அன்னை திருத்தலத்தில் திருச்செபமாலைக் காரணிக்கம் பாடலாகவும் மற்றும் மருதமடு அன்னையின் பிரார்த்தனை, மன்றாட்டுகளும் மேற்கொள்ளப்பட்டது.

அடுத்து மாதகல் புனித லூர்து அன்னை கெபியில் ஒப்புரவு அருட்சாதனம் பெறுவதற்கான ஆன்மீக தயார்படுத்தல் அருட்தந்தை இருதயதாஸ் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டது. சில நிமிடங்களுக்குக் கண்களை மூடி நிசப்தமான சூழலில் இயல்பான சுவாசத்துடன் அமைதியான உள்ளத்தின் குரலுக்கு செவிமடுக்கும்படியான ஓர் ஆழமான ஆன்மீகப் பயிற்சியின் ஊடாக தந்தையவர்கள் அனைவரையும் நெறிப்படுத்தினார்.

பண்டத்தரிப்பு புனித பாத்திமா அன்னை திருத்தலத்தில் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. தொடர்ந்து மதிய போசனம் இடம்பெற்றது. இவை பண்டத்தரிப்பு பங்குத் தந்தையினால் நெறிப்படுத்தப்பட்டது.

தும்பளை லூர்து கெபியில் அருட்தந்தை இருதயதாஸ் அடிகளாரால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து தேநீர் உபசரணை நடைபெற்றது.

இறுதியாக முகமாலை புனித அன்னை வேளாங்கண்ணி மாதா திருத்தலத்தில் திருச்செபமாலை ஓர் காரணிக்கமும், நன்றி வழிபாடும் ஆசீர்வாதமும் நடைபெற்று யாத்திரை முடிவுற்றது. மாலை 06.30 மணியளவில் குழுவினர் பேராலயம் வந்து சேர்ந்தனர்.

இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டோர் அனைவரும் கேளிக்கை மற்றும் பொழுது போக்கு உணர்வுகள் இல்லாமல் ஓர் ஆழமான பக்தி உணர்வுடன் பங்குபற்றியமை அவதானிக்கப்பட்ட சிறப்பான விடயமாகும். சிறப்பான இறையனுபவத்துடன் இவ்வாறான செயற்பாடுகள் எதிர் காலத்திலும் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற உணர்வுடன் அனைவரும் தம் இல்லம் நோக்கித் திரும்பினர்.

**போ. இ. ஜேசுதாசன்**
**இளவாலை**

## அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை

### மணமகள் தேவை

வயது: 34
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: G.C.E A/L
தொழில்: (Northern Unique Zone 9PVT) LTD
பிரதேச செயலகம்: யாழ்ப்பாணம்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரச உத்தியோகம்

வயது: 44
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: Medical Rep
கல்வித்தகைமை: G.C.E A/L
பிரதேச செயலகம்: கோப்பாய்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
நற்குணமுள்ள பெண்.

வயது: 34
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: B.A பட்டதாரி
தொழில்: D.O
பிரதேச செயலகம்: புதுக்குடியிருப்பு
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரசாங்கம், தனியார் வேலை எதிர்பார்ப்பு

வயது: 45
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: G.C.E A/L
தொழில்: வாகன சாரதி
பிரதேச செயலகம்: யாழ்ப்பாணம்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
நற்குணமுள்ள பெண்

வயது: 34
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: விற்பனையாளர்
கல்வித்தகைமை: G.C.E (O\L)
பிரதேச செயலகம்: யாழ்ப்பாணம்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
நற்குணமுள்ள பெண்

வயது: 40
வயது: 33
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
தொழில்: D.O
கல்வித்தகைமை: B.A. பட்டதாரி
பிரதேச செயலகம்: பருத்தித்துறை
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
அரசாங்க உத்தியோகம் எதிர்பார்ப்பு

### மணமகன் தேவை

வயது: 26
சமயம்: றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை: Medical Assistant, Diploma in Home Science Course (A/l Level)
பிரதேச செயலகம்: கோப்பாய்
வாழ்க்கைத் துணை பற்றிய எதிர்பார்ப்பு:
கிறிஸ்தவ குடும்பம்
அரசாங்க வேலை ( முதல் இடம்)
தனியார் வேலை
வயது எல்லை (27-33)

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கங்கள் 077- 942 2970, 077 - 904 7651, 021- 222 2856**

# மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச்சுரூப முடிசூட்டு நிகழ்வும் அதன் பின்புலமும்

முன்னுரை

இறைவன் தமது அளவு கடந்த அருளையும் கருணையையும் மக்கள் மீது பொழிவதற்கும் மக்களை நெறிப்படுத்துவதற்கும், தாம் விரும்பிய குறித்த நபர்களையும் சிறப்பான இடங்களையும் தெரிவு செய்து, தமது மீட்புச் செயலைப் பழைய ஏற்பாடு முதல் இன்றுவரை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார். பழைய ஏற்பாட்டில் யாக்கோபுக்குத் தம்மை வெளிப்படுத்திய இறைவன் பெத்தேல் என்னுமிடத்தையும், எரியும் புதரில் மோசேயுடன் பேச ஒரேபு மலையையும், பத்துக் கற்பனைகளை வழங்க சீனாய் மலையையும், புதிய ஏற்பாட்டில் இயேசுவின் பிறப்பிற்கு பெத்லகேம் சிற்றூரையும், இறை மகனின் மாட்சியை வெளிப்படுத்தஜுபோர் மலையையும், இயேசுவின் சிலுவை மரணத்திற்குரிய இடமாகக் கல்வாரியையும் தேர்ந்து கொண்டார்.

மேலும் இறைபராமரிப்பின் தொடர்ச்சியாக நாம் வாழும் இக் காலத்திலும், உலகில் எந்தவித வரலாற்று முக்கியத்துவமும் பெறாத பல சிறு கிராமங்களைத் தெரிவு செய்து, தேவ அன்னையின் திருத்தலங்களாக வளர்த்து அண்டிவரும் பக்தர்களுக்கு அருள்மாரி பொழிந்து, புதுமைகள் புரிந்து, குறைகள் போக்கி அமைதியும் அருளும் வழங்குகின்றார். இவ்வாறு இலங்கையின் வட பகுதியில் வன்னி நிலப்பரப்பில் தோன்றிய திருத்தலமே மருதமடு அன்னையின் திருத்தலமாகும்.

ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியினரின் துன்புறுத்தலின் விளைவாக இலங்கைத் திருஅவைக்கு இறைவனின் மாபெரும் வரப்பிரசாதமாக இத்திருத்தலம் அமைந்தது எனக் கொள்வது மிகப் பொருத்தமானது. (இக்கட்டுரையில் இடம்பெறும் அதிக விடயங்கள் அருட்பணி. ஏ. ஜே. பி. அன்ரனயினஸ் அடிகளின், The Chronicle of the Sanctuary of Our Lady of Madhu, 1979 என்னும் நூலிலிருந்து பெறப்பட்டவையாகும்).

## ஆரம்ப வரலாறு

மருதமடு மாதா திருச்சுரூபத்தின் ஆரம்ப வரலாற்றிற்கும், மாந்தை ஆலயத்திற்கும், மாந்தை ஆலயத்தில் மக்கள் வழிபாட்டிற்குப் பயன்படுத்திய ஆரோக்கிய மாதா திருச்சுரூபத்திற்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்னும் விடயம் பாரம்பரியமாகக் கையளிக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு கையளிக்கப்பட்டு வந்த இத் தகவலை மடு ஆலயப் பங்குத்தந்தை வண. மசியெற் அமதி (Fr. Massiet OMI) அடிகள் மடுத்திருப்பதி ஆவணத் தொகுப்பில் 1886இல் முதலில் பதிவு செய்துள்ளார். இவரே மடுத்திருப்பதியின் நிகழ்வுகளைப் பதிவு செய்யும், அதாவது ஆவணத் தொகுப்பில் (Codex Historicus) எழுதும் மரபை முதலில் ஆரம்பித்தவர். இதைப் பதிவு செய்தபோது மாந்தையில் 1670இற்கு முன்பே ஒரு கத்தோலிக்க ஆலயம் இருந்தது என்பது பற்றிய செய்தியை அவர் தெரிந்திருக்கவில்லை. இதனை ஓர் ஊகமாகவே பதிவு செய்திருந்தார் என்பது அருட்பணி அன்ரனயினஸ் அமதி அவர்களின் கருத்து.

எனினும், 1614இல் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த வண. பேத்ரோ டி பெற்றன்கோ (Friar Pedro de Betancor) மாந்தையில் விசாலமான, கல்லாலான அழகிய ஆலயத்தைக் கட்டியதுடன் ஆலயத்திற்கு அருகாமையில் கல்லினால் இருமாடிக் கட்டடத்தையும் கட்டினார். (VPP, II, 459). இதுவே அருட்தந்தையர்களின் தங்குமிடமாகவும் மாதோட்டத்திலுள்ள ஆலயங்களுக்கு முதன்மை ஆலயமாகவும் திகழ்ந்தது. புனித ஆரோக்கிய மாதாவிற்கு இந்த ஆலயம் நேர்ந்தளிக்கப்பட்டது. (Trinade, III, 194; Queyros, 695). மருதமடு மாதா திருச்சுரூபத்துடன் தொடர்புள்ளதாக மாந்தை மாதா ஆலயம் விளங்கியது.

## வன்னி - பனங்காமம்பற்றில் ஆலயம்

வன்னி நான்கு பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பற்றும் வன்னியர் அல்லது வன்னிச்சி என்பவர்களால் ஆளப்பட்டது. அதேவேளை, வன்னி கண்டி அரசனின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. இக்காலத்தில் 2ம் இராஜசிங்க மன்னன் (1635-1687) கண்டி அரசை ஆண்டான். (Quere, 230). வன்னிக்காட்டுப் பகுதியிலுள்ள பனங்காமப் பற்றில் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த பேத்ரோ டீ பெற்றன்கோ அடிகள் பலருக்குத் திருமுழுக்கு அளித்ததுடன் பனங்காமப் பற்றில் ஓர் ஆலயத்தையும் கட்டியுள்ளார். அதனை எந்தப் புனிதருக்கு நேர்ந்தளித்துள்ளார் என்பது பற்றிய குறிப்பு இல்லை. (Queyrors, 695) வன்னிக் காட்டுப் பனங்காமம் பற்றில் ஆலயம் உள்ளமை பற்றி மன்னார், மாதோட்டம் மற்றும் யாழ்ப்பாண மக்களும் அறிந்திருப்பதற்கான வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் அதிகம் இருந்திருக்கின்றன. மடுக்கிராமம் பனங்காமம் பற்றில் அமைந்துள்ளது என ஆசிரியர் குவைறோஸ் குறிப்பிட்டுள்ளார் (Queyros, p.51). இக் காலத்திற்குரிய ஏனைய வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தி நோக்கும்போது, இவ்வாறு வன்னி பனங்காமப்பற்றில் அமைந்த ஆலயம் மடுக் கிராமத்திலேயே அமைந்திருக்கும் எனக் கொள்ளலாம்.

## மடுக்கிராமத்தில் மன்னார், மாதோட்ட, யாழ்ப்பாணக் கத்தோலிக்கர்

போர்த்துக்கேயர் ஆட்சியில் யாழ்ப்பாண அரசில், அரச ஆதரவுடன் வேரூன்றி வேகமாகப் பரவிய கத்தோலிக்கம் 1658 முதல் ஒல்லாந்தர் ஆட்சியில் அவர்கள் மேற்கொண்ட கலாபனைகளால் பெரிதும் நலிவுற்றது. இப்பின்னணியில் ஒல்லாந்தர் கலாபனையிலிருந்து தங்களையும் தங்கள் இறை நம்பிக்கையையும் காக்கும் பொருட்டு, மன்னாரைச் சேர்ந்த இருபது குடும்பங்கள் கண்டி அரசிற்குட்பட்ட வன்னிக்காட்டுப் பகுதிக்குள் சென்றனர்(Madhu Codex, 1886). மாந்தைக் கத்தோலிக்கரும் தாங்கள் வழிபட்ட ஆரோக்கிய மாதா திருச்சுரூபத்துடன் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்றனர். இதனை "மருதமடுத் திருப்பதிகள் துணை'' என்னும் நூலும் ஆதாரப்படுத்துகின்றது. 'மன்னார்-மாதோட்டக் கத்தோலிக்கர் இணைந்து ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களுக்குத் தப்பி மருதமடுக் குளத்திற்கு அண்மையில் தஞ்சமடைந்தனர்" (மருதமடு திருப்பதிகள் துணை, 1899,42). மன்னார் மற்றும், மாந்தையிலிருந்து சென்ற மக்கள் மடுக் கிராமத்தில் எந்தக் குருவின் உதவியுமின்றிக் காணப்பட்டனர்.

இதேகாலத்தில், யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் படையினர் கத்தோலிக்கரைக் கடுமையாகத் துன்புறுத்தினர். 1658இல் அருட்பணி. கல்டிரோ (Fr. Calderio, SJ) என்னும் இயேசுசபைக் குரு கொல்லப்பட்டார். ஏனைய இயேசுசபைக் குருமார் எல்லோரும் நாடு கடத்தப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கர் மிகவும் துன்புறுத்தப்பட்ட பின்னணியில், அண்ணளவாக 700 பேர் ஏழு குருமாருடன் பூநகரி ஏரியைக் கடந்து வன்னிப் பெருநிலப்பரப்பிற்குச் சென்றுள்ளனர். இவர்கள் மன்னார் மற்றும் மாந்தையிலிருந்து வந்து மடுக்கிராமத்தில் தங்கியிருந்த கிறிஸ்தவர்களுடன் இணைந்து கொண்டனர் (M.C.1886). உள்ளூர்ப் பாரம்பரியத்தின்படி "மடுத்திருப்பதியில் ஏழு குருக்கள் தங்கிப் புனிதமான வாழ்க்கை வாழ்ந்து, மக்களுக்குப் பாவமன்னிப்பு அருளடையாளத்தை வழங்கி, திருப்பலி ஒப்புக்கொடுத்துத் தங்களது பணியினால் கலாபனைக் காலத்தில் மடுப்பதியைத் தேடி வந்த மக்களுக்கு ஆறுதல் வழங்கினர். இறை பராமரிப்புக்குத் தங்களைக் கையளித்துப் புனிதமான வாழ்க்கை வாழ்ந்து, பல துன்பங்கள் மத்தியில் அர்ப்பணிப்போடு மக்களுக்குப் பணியாற்றியவர்கள் இறந்த போது மடு ஆலயத்திலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளனர் (Chr, 35; D/42, J.B.A). இந்த ஏழு குருமாரும் போர்த்துக்கேய பிரான்சிஸ்கன் சபைக் குருமாராக இருக்கலாம்.




## மடுக்கிராமத்தில் யோசப் வாஸ் மற்றும் பேத்ரோ பெற்றாவோ அடிகள்

மடுஆலயத்தின் முதற் பங்குத் தந்தையான பேத்ரோ பெற்றாவோ அடிகள் மாதோட்டத்தில் எதிர்கொண்ட தனிமை, ஒல்லாந்தரின் கெடுபிடிகள், பிற சமயத்தவர்களின் எதிர்ப்பு மற்றும் கத்தோலிக்கர் தங்கள் சமய ஈடுபாடுகளில் கொண்டிருந்த வேண்டா வெறுப்பு மனப்பாங்கு, கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிரான மூடப்பழக்க வழக்கங்கள் காரணமாக விரக்தியுற்ற நிலையில் 1697இல் மாதோட்டத்தை விட்டு வன்னியின் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்றார் (VPD, I, 139-140). எனினும் எங்கு சென்றார் என இடம் குறிப்பிடப்படவில்லை. இது கிறிஸ்தவர்கள் வாழ்ந்த சிலேனா மடுவாக இருக்கலாம். இதனை அறிந்த யோசப் வாஸ் அடிகள் மடுக் கிராமத்திற்குச் சென்று பேத்ரோ பெறாவோ அடிகளுடன் சிலநாட்கள் தங்கி அவரை ஊக்குவித்துள்ளார் (மேலது. பக்.140).

## பேத்ரோ பெறாவோ அடிகள்

சிலேனா மடுவில் 1701இல் ஓர் ஆலயத்தைக் கட்டியுள்ளார் (மேலது. பக்.213). 1705இல் வன்னியில் ஏழு ஒறற்றோறியன் சபைக்குருமார் ஒன்று கூடி அன்னை மரியாவின் பிறந்த தினத்தை, 08 செப்ரம்பர் 1705இல் பெருவிழாவாகக் கொண்டாடியதுடன் மறுநாள் ஒன்றுகூடிக் கலந்துரையாடி, பணித்தளப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டனர். மேலும்1705இல் சிலேனா மடுவிலும் மாதோட்டத்திலும் பணியாற்ற பேத்ரோ பெற்றாவோ அடிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது (மேலது. பக்.297). இவர் சிலேனா மடுவிலும் மாதோட்டத்திலும் 25 ஆண்டுகள் மிகக் கடினமாகப் பணியாற்றியுள்ளார். 1711ம் ஆண்டு பாஸ்கு வழிபாடுகள், பாசோ சடங்குகளுடன் வன்னியில் இடம்பெற்றபோது, வன்னி மற்றும் மாதோட்டத்தை அண்டிய ஏனைய இடங்களிலிருந்தும் வந்த மக்கள் பல நாட்கள் அங்கேயே தங்கிப் பாஸ்கா வழிபாடுகளில் கலந்து கொண்டார்கள் (VPD, I, 453).

## மடு பிரபல்யம் பெற்றமைக்கு முன்வைக்கப்பட்ட இரு முக்கிய காரணிகள்

ஆயர் பொஞ்சின் அமதி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய யொண்குவே அமதி (Fr. R. P. Jonquet, 1910) அடிகள் பொருத்தமான தொரு வினாவை முன்வைத்துள்ளார். "மடுத் திருப்பதியை நோக்கி இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும், தென் இந்தியாவிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூடி வருவதற்கு முக்கிய காரணம் என்ன? இங்குள்ள அன்னை மரியின் புதுமைமிகு திருச்சுரூபமா அல்லது இங்கு பணியாற்றிப் புனிதமான வாழ்வு வாழ்ந்த ஏழு குருக்களும் இங்கு அடக்கம் செய்யப்பட்டதா?".

இந்த இரண்டு காரணங்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களாக ஆயர் யூலெயின் அமதி ஏற்கனவே முன்வைத்திருந்தார். மேலும் மடுத் திருப்பதி பற்றி 1875இல் மன்னார் நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பிலும் மேற்கூறப்பட்ட விடயம், பதிவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயர் போஞ்சினும் இதே விடயத்தைப் பதிவு செய்துள்ளார். அருட்தந்தை றெமேஸ்கிரிச்சன் அமதி (Fr.P.J.Rommerskirchen) "இலங்கையில் அமலமரித் தியாகிகளின் பணி" (1931) என்னும் தமது நூலில் ஆயர் போஞ்சின் கூறிய அக்கருத்தை மேலும் வலியுறுத்தியுள்ளார்.

மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச் சுரூபத்தைத் தேடிவந்து, வழிபட்டுக் காணிக்கை செலுத்திய பக்தர்களின் எண்ணிக்கை காலக்கிரமத்தில் படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது இன்றும் தொடர்ந்து அதிகரிக்கின்றது. அதேவேளை குருக்கள் பற்றிக் கூறப்பட்ட மேற்படி கூற்றுகள் சரியாயின், புனிதவாழ்வு வாழ்ந்து மடுவிலேயே புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் குருக்கள் பற்றி ஏன் இன்று எவரும் பேசுவதில்லை? இதனை வரலாற்றுப் பின்னணியில் நோக்கலாம்.

வன்னியின் அடர்ந்த காட்டுச் சூழலில் நிலவிய கடும் வெப்பத்தின் விளைவாகத் தோன்றிய "பறங்கி" என்னும் தோலைப் பாதிக்கும் ஒருவகைத் தொற்று நோய்க்கும், இந்தியாவிலிருந்து வேலைக்கு அழைத்து வரப்பட்டவர்களால் பரவிய "கொலரா" என்னும் கொடிய தொற்றுநோய் மற்றும் கடும் வறட்சி காரணமாகப் பாதுகாப்புத் தேடிய மக்கள் மேலும், மேலும் காட்டின் உட்பகுதிக்குள் சென்று குடியேறினர். இவ்வாறு தோன்றிய ஒரு குடியேற்றமே தம்பனைக் கிராமமாகும் (S.A. Gnana Pragasar, 7,8)மேலும் இவ்வாறு இடம்பெயரும்போது மக்கள் தாங்கள் வழிபட்ட திருச்சுரூபங்களையும் தங்களுடன் எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் தகவல் ஒறற்றோறியன் குருமார் உரோமைக்கனுப்பிய அறிக்கைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. "வன்னியிலும் மாதோட்டத்தின் சில இடங்களிலும் நிரந்தரமான ஆலயங்கள் இல்லை. தொடர் வறட்சியால் வேளாண்மை பொய்த்த வேளையில், மக்கள் தாங்கள் வழிபட்ட திருச்சுரூபங்களுடன் ஓரிடத்திலிருந்து வேறு இடங்களைத் தேடிச் சென்றுள்ளனர் (Chr., 97: . இவ்வாறே மடு மாதா புதுமைமிகு திருச்சுரூபம் கள்ளிக்கட்டைக் காட்டிற்குச் சென்றிருக்கலாம் என அன்ரனயினஸ் அடிகள் கூறியுள்ளார் (Chr.,97). 1817-1828 காலப் பகுதியில் ஆலயம் முற்றாகச் சேதமடைந்த நிலையில் புதுமைமிகு திருச்சுரூபம் கள்ளிக் கட்டைக்காட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது (Chr., 98; D.100 JBA).1863இல் அருட்பணி புசாக்கு அமதி மடு ஆலயத்திற்குப் பொறுப்பாகப் பணியாற்றியபோது அடம்பன்மோட்டை, காத்தான்குளம் புனித சூசையப்பர் ஆலயத்திற்கு மடுமாதா திருச்சுரூபத்தை எடுத்துச் செல்வதற்கு அனுமதி

**அருட்தந்தை. ஞானமுத்து பிலேந்திரன்**

வழங்கியுள்ளார் (Chr., 155: D.51 JBA).

பிரிவினை வாதக்குரு பிரான்சிஸ்கோ யுவான் மடு ஆலயத்தில் பிரச்சினை ஏற்படுத்திய காலத்தில் புதுமைமிகு திருச்சுரூபம் மடுவிலிருந்து மாதோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது பற்றி விவியர் அமதி அடிகள் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். எனினும் மாதோட்டத்தில் எந்த ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது எனக் குறிப்பிடவில்லை. இது அடம்பன்மோட்டையாக இருக்கலாம் என அன்ரனையினஸ் அடிகள் குறிப்பிட்டுள்ளார் (Chr., 135; D.87 J.B.A).

ஒரு காலத்தில் ஆலயம் இருந்த இடத்தில் சிறு கொட்டில் ஆலயம் மட்டும் இருந்துள்ளது மக்கள் தங்கள் காணிக்கையை அருகிலிருந்த மரப்பொந்தில் இட்டுள்ளார்கள் (Chr., 98). ஆலயம் இல்லாத காலத்திலும் திருச்சுரூபமானது எப்பொழுதும் மக்களுடனே இருந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

புதுமைமிகு திருச்சுரூபம் பற்றிய விடயங்கள் இவ்வாறிருக்க, அருட்தந்தையர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தையும், குருக்களையும் நீண்டகால இடப்பெயர்வுகள் காரணமாகக் காலக்கிரமத்தில் மக்கள் படிப்படியாக மறந்திருக்கலாம்.

## 1876இல் இடம்பெற்ற மணிமுடி சூட்டு நிகழ்வு

மடுக்கிராமத்தில் சிறு கொட்டிலாக இருந்த ஆலயத்திற்குப் பதிலாகப் பெரிய ஆலயம் கட்டுவதற்கு 08 யூலை 1872இல் ஆயர் போஞ்சின் அமதி அடிக்கல் நாட்டினார். எனினும் ஆயரின் இம்முயற்சிக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பிய போதும் இறுதியில் ஆயரின் முயற்சி வெற்றி பெற்றது. இது மருதமடு அன்னையின் பரிந்துரையால் கிட்டிய ஆசீர் என்பது ஆயரின் உறுதியான நம்பிக்கை. எனவே, மருதமடு அன்னையின் பரிந்துரையால் பெற்ற இந்த மாபெரும் ஆசீருக்குப் பிரதியுபகாரமாகத் தமது நன்றியை வெளிப்படுத்த 02 யூலை 1876, ஆயர் போஞ்சின் அமதி மருதமடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபத்திற்குப் பெறுமதி மிக்க இரத்தினக் கற்கள் பதித்த சிறந்த கலையம்சங்களைக் கொண்ட தங்க மணி முடியைச் சூட்டினார் (Mgr. Bon jean by Jonquet, 243). இந்த நிகழ்வு அமைதியான முறையில் இடம்பெற்றது.

## மணிமுடி சூட்டுவதற்கு ஆயர் புறோ அமதி மேற்கொண்ட முயற்சிகள்

யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக 25 ஆண்டுகள் பணியாற்றி, மடுத்திருப்பதியில் வழிபாடுகளிலும் உட்கட்டமைப்பிலும் பல முற்போக்கான மாற்றங்களுக்குத் துணை நின்ற ஆயர் கென்றி யூலெயின் அமதி அவர்கள் தமது காலத்திலேயே மருதமடு மாதாவின் திருச்சுரூபத்திற்கு வெகு விமரிசையாக மணிமுடி சூட்டு நிகழ்வை மேற்கொள்ள நீண்ட நாட்களாக பேராவலாயிருந்தார். எனினும் இறைவனின் திருவுளம் வேறுவிதமாக இருந்தது. ஆயர் கென்றி யூலெயின் 07 பெப்ரவரி 1919இல் இறைபதமடைய, 24 பெப்ரவரி 1920 ஆயர் யூல்ஸ் அன்று புறோ அமதி யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார்.

இந்நிலையில் கத்தோலிக்கத் திரு அவையின் மரபுப்படி ஒரு நாட்டின் ஆயர் மன்றத்தினர் குழுவாகவும், தனியாகவும் திருத்தந்தையைச் சந்தித்துத் தங்கள் வணக்கத்தையும் கீழ்ப்படிவையும் செலுத்தும் (Ad Limina visit) நிகழ்வு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறும். 07 ஏப்ரல் 1921இல் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆயர் புறோ அமதி திருத்தந்தையைச் சந்தித்த போது மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச்சுரூபத்திற்குமணிமுடி சூட்டுவதற்குத் திருத்தந்தையின் சிறப்பு அங்கீகாரத்தைப் பெற்றார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இத் திருச்சுரூபத்திற்கு மணிமுடி சூட்டுவதற்கு ஆயர் புறோ நன்கு திட்ட மிட்டு, சிறந்த பல முன் ஆயத்தங்களை மேற்கொண்டார். 11 பெப்ரவரி 1922இல் ஆயர் புறோ தமது மறை மாவட்ட அருட்பணியாளர்கள், துறவியர் மற்றும் மக்களுக்கு எழுதிய முதலாவது திருத்தூது மடலில், மடு ஆலயத்தின் வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு மருதமடு மாதாவின் திருச்சுரூபத்திற்கான மணி முடிசூட்டு நிகழ்விற்குத் தாம் மேற்கொள்ளத் திட்டமிட்ட ஆயத்தங்களையும் விரிவாக விளக்கியுள்ளார். ஆயரின் அருட்பணி மடலிலிருந்து சில கருத்துகளை முன்வைப்பது பொருத்தமானது.

"எங்கள் முதல் அருட்பணி மடலில் நாம் உரோமாபுரி நகரிலிருந்து திரும்பியவுடன் மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச் சுரூபத்திற்கு மணிமுடி சூட்டத் திட்டமிட்டமை பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். எமக்கு முன்பு பணியாற்றிய ஆயர் யூலெயின் அமதி அவர்களின் எதிர்பார்ப்பும் இந்நிகழ்வை விரைவாகவும், சிறப்பாகவும் நிறைவேற்ற வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. நாமும் ஆயராக நியமனம் பெற்றது முதல் இந்த நிகழ்வை மிகவும் விமரிசையாகவும் பக்தியுடனும் நிகழ்த்தப் பேராவல் கொண்டிருந்தோம். இதனால் நாம் திருத்தந்தையிடம் பெற்றுக் கொண்ட சிறப்புச் சலுகையின் அடிப்படையில், இலங்கைக்கான திருத்தந்தையின் பதிலாள், 02 யூலை 1922இல் மருதமடு மாதாவின் திருச் சுரூபத்திற்கு மணி முடி சூட்டுவார் என்னும் செய்தியை உங்களுக்கு மகிழ்வுடன் அறிவிக்கின்றேன். இதற்கென நாம் விடுத்த கோரிக்கைக்கு 07 ஏப்பிரல் 1921இல் இலங்கைக்கான திருத்தந்தையின் பதிலாள் (Delegate Apostolic) அவர்களுக்குத் திருத்தந்தையின் பெயரால் திருச்சுரூபத்திற்கு மணிமுடி சூட்டும் நிகழ்வை நடத்துவதற்குத் திரு ஆட்சிப் பீடத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த அறிவிப்பு மடுமாதாவின் பக்தர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியாக அமையும்.

ஆரம்பகாலம் முதல் இங்கு தேவ அன்னை மட்டில் பக்தி நிலைத்துள்ளது. இந்த வருடம் மற்றுமோர் முக்கிய வரலாற்று நிகழ்வை நினைவு கூரும் ஆண்டாக விளங்குகின்றது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 8 செப்ரம்பர் 1622இல் யாழ்ப்பாண அரசு பரிசுத்த கன்னி மரியாவிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இதே நாளில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராட்சியத்தை வானக அரசிக்கு அர்ப்பணித்து மரியன்னையை விண்ணகப் பாதுகாவலியாகப் பிரகடனப்படுத்தினர். இந்த அர்ப்பண விழா யாழ்ப்பாணக்கோட்டையின் மேற்குத் திசையில் அமைந்துள்ள ஆலயத்தினுள் இடம்பெற்றது".

இப்பின்னணியில், 1921 ஆகஸ்ற் 23, 24ம் திகதிகளில் மடு ஆலயத்தில் தங்கியிருந்த ஆயர் புறோ அமதி மடு மாதாவின் மணிமுடியைச் செப்பனிட்டு, அழகுபடுத்தி மெருகூட்டுவதற்கு அதனை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் சென்றார். இம்மணிமுடி சூட்டு விழா 02 யூலை 1922இல் நடத்துவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மணிமுடி சூட்டு நிகழ்விற்கு ஏற்பட்ட எதிர்பாராத தடங்கல்கள்

ஆயர் யூல்ஸ் புறோ அமதி, நீண்ட காலம் காத்திருந்த மணிமுடி சூட்டு நிகழ்வை யூலை 1922இல் நடத்த முடியாதவாறு பெரும் துயரச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றன. 12 பெப்ரவரி ஏற்பட்ட சீரற்ற காலநிலை, சூறாவளி, கடும் மழை, வெள்ளப்பெருக்குக் காரணமாக ஆலயச் சூழல் எங்கும் வெள்ளக் காடாகக் காட்சியளித்தது. மடு ஆலயமும் பங்கு மனையும் மட்டுமே நீர்மட்டத்திற்கு மேல் காணப்பட்டன. கட்டடங்கள் இயற்கையின் சீற்றத்திற்கும் தாக்கத்திற்கும் ஈடுகொடுக்கமுடியாத நிலையில் முற்றாக இடிந்து வீழ்ந்தன. இவை அனைத்திற்கும் மேலாக, மடு ஆலயத்தில் ஒன்றுகூடும் பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்குத் தேவையான நீரை வழங்கும் விசாலமான குளம் உடைப்பெடுத்துக் குளத்துநீர் முற்றாக வெளியேறியது இந்நிலையில், ஏற்கனவே திட்டமிட்ட படி 02 யூலை 1922இல் மணிமுடிசூட்டு நிகழ்வை நடத்த முடியாத நிலையில், முடிசூட்டு நிகழ்வைப் பின்போட வேண்டிய தவிர்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. மேலும், பெப்ரவரி 15இல் மாதோட்டம் முழுவதும் பேரழிவிற்கு உட்பட்டது. எங்கும் நீர்மட்டம் உயர்ந்து காணப்பட்டது. மணிமுடி சூட்டு நிகழ்வைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்னும் எதிர்பார்ப்புடன் நீண்டகாலம் காத்திருந்த ஆயருக்கு இது பெரும் ஏமாற்றமாகவும் கசப்பான அனுபவமாகவும் மாறியபோதும் ஆயர் யூல்ஸ் புறோ அமதி இச்சம்பவத்தைத் துணிவுடனும், சகிப்புத் தன்மையுடனும் ஏற்றுக் கொண்டார்.

## மீண்டுமோர் தடங்கல்

மருதமடு மாதாவின் திருச்சுரூபத்திற்கு மணிமுடிசூட்டு நிகழ்வைச் சிறப்பாக நடத்துவதற்கு ஆயர் யூல்ஸ் புறோ அமதி பல திட்டங்களை முன்னெடுத்த போதும் தொடர்ச்சியாகப் பல தடைகளை எதிர்நோக்கினார். எனினும் எந்த நிலையிலும் மனம் சலிக்காது எல்லாத் தடைகளையும் துணிவுடன் எதிர்கொண்டார். இந்த நிகழ்வுகள் பற்றி ஆயர் யூல்ஸ் புறோ அமதி அவர்களின் பார்வை முற்றும் மாறுபட்டதாக அமைந்திருந்தது.

ஆயர் தமது பார்வையை 03 டிசம்பர் 1922இல் எழுதிய கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மருதமடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபத்திற்கு மணிமுடி சூட்டுவதற்குத் திரு ஆட்சிப் பீடம் எங்களுக்கு அனுமதி வழங்கியதிலிருந்து தீமையின் சக்தி எங்களுக்குத் தடையாகச் செயற்பட்டு இந் நிகழ்வைப் பின் தள்ளிக் கொண்டு செல்கின்றது. கடந்த வருடம் மடுக்குளம் உடைப்பெடுத்ததால் மணிமுடிசூட்டு நிகழ்வைப் பிற்போட வேண்டிய துன்பகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இப்பொழுது மற்றுமோர் துன்பகரமான அழிவின் செய்தி எங்களை வாட்டுகின்றது. கடும் மழை காரணமாக 19 நவம்பர் 1922 இரவு ஆலயத்தின் முகப்பு முற்றாக இடிந்து வீழ்ந்து ஏற்படுத்திய சேதத்தினால் தற்போது ஆலய முகப்பு இடி பாடுகளின் குவியலாகக் காட்சியளிக்கின்றது. இதனால் ஏற்பட்ட முழுச் சேதமும் அண்ணளவாகப் பத்தாயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பாரிய இழப்பின் மத்தியிலும் எந்தவித உயிர் ஆபத்தும் ஏற்படவில்லை என்பது பெரும் ஆறுதலாக அமைகின்றது.

இத்துயர நிகழ்வு பெரிய திருவிழாக் காலங்களில் இடம் பெற்றிருக்குமாயின் அதன் விளைவை எண்ணும் போது கற்பனையில் கூட நினைக்க முடியாத நிலைக்கு உடல் புல்லரிக்கின்றது. இதில் மரியன்னை எங்கள் மீது காட்டிய அளவு கடந்த அன்பையும் பாதுகாப்பையும் நினைந்து, இத்துன்ப நிகழ்வின் மத்தியிலும் எங்களைக் காத்தமைக்காக அன்னைக்கு என்றும் நன்றி செலுத்துகின்றோம்.

மாதாவின் புதுமைமிகு திருச் சுரூபத்திற்கான மணிமுடிசூட்டு விழாவை வெகு விமரிசையாக நடத்த வேண்டும் என்பது எனது ஆழ்ந்த விருப்பம். அதற்கு முன்பு ஆலயத்தையும் ஏனைய திருத்த வேலைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பது எங்கள் விருப்பமாயிருப்பினும் இவை எங்கள் ஆற்றலுக்கு அப்பாற்பட்டவையாகும். எனினும் முடி சூட்டு நிகழ்வு எதிர்வரும், 02 யூலை 1923 இடம்பெறும். ஆலய முகப்பின் மீள் கட்டுமானத்திற்கும் போட்டிக்கோ மண்டபத்தை அமைப்பதற்கும் எதிர்காலத்தில் கூடும். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வசதியான முறையில் பங்கு கொள்வதற்கு ஏற்ற வகையில் திருத்தங்களை மேற்கொள்ள மடுத்திருப்பதியில் கூடும் பக்தர்களிடம் வேண்டிக் கொள்வது ஏழையான யாழ்ப்பாண ஆயர் இப்பணியை மேற்கொள்வதற்குத் தாராளமான நிதி உதவியை வழங்குங்கள். போதிய நிதியுதவி கிடைக்குமிடத்து முகப்பின் மீள்கட்டுமானத்தை மேற்கொள்வதோடு போட்டிக்கோவையும் கட்டுவதற்குப் போதிய கால அவகாசம் உண்டு. எனவே, மருதமடு அன்னையின் பெயரால் அன்னையின் பக்தர்கள், எங்கள் எல்லா நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகளிடம் நாம் வினயமாகக் கேட்டுக்கொள்வது, இந்த நற்பணிக்குத் தாங்கள் தாராள பங்களிப்பை வழங்கி இறைவனின் சிறப்பான ஆசீரைப் பெற்றுக் கொள்வதுடன், யாழ்ப்பாண ஆயர் என்றும் உங்களுக்கு நன்றிக் கடனுள்ளவராக விளங்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

ஆயரின் கோரிக்கைக்கு மிகச் சாதகமாக மக்கள் செவிமடுத்தமையால் நன்கொடைகள் தாராளமாக வந்து குவிந்தன. இதைக் கண்ட ஆயர் மணிமுடி சூட்டு நிகழ்வைச் சிறப்பாகவும், பக்தி பூர்வமாகவும் 02 யூலை 1923இல் நடத்துவதற்கான ஆர்வத்தோடு திட்டங்களைத் தயார் செய்தார்.

## மீண்டுமோர் சோகமான தடங்கல்

ஆயர் புறோ அமதி, ஆர்வத்தோடு திட்டங்களை முன்னெடுத்த நிலையில் இறைவனின் திருவுளம் முற்றும் எவரும் எதிர்பாராத விதமாக அமைந்தது. 20 ஜனவரி 1923, அன்று காலை ஆயர் புறோ அமதி, அவர்களின் அறையில் மாட்டப்பட்டிருந்த அவரது நிழற்படம் காற்றினால் கீழே வீசப்பட்டு வீழ்ந்து பல துண்டுகளாக உடைந்தது. இது ஓர் அபசகுனம் எனப் பலராலும் பேசப்பட்டது. சில நிமிடங்களில் ஆயரின் மரணச் செய்தி மக்களை ஆழாத்துயரில் ஆழ்த்தியது.

ஆயர் யூல்ஸ் புறோ அமதி மேற்கொண்ட அளப்பரிய சேவையின் பொருட்டு படைத்தவர் அவருக்கு நித்திய சம்பாவனையின் முடியைப் சூட்டுவதற்கு விண்ணகம் அழைத்துக் கொண்டார். வேகமாகப் பரவிய ஆயரின் திடீர் மரணச் செய்தி யாழ்ப்பாண மறைமாவட்டம் முழுவதையும் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியது. இப்பொழுது யாழ்ப்பாண மறை மாவட்டம் ஆயர் இன்றி வெற்றிடமாக இருந்தது.

## விமரிசையாக இடம்பெற்ற மணிமுடி சூட்டு நிகழ்வு

ஒரு வருடத்தின் பின்பு, 16 ஜனவரி 1924 அருட்பணி யோண் அல்பிரட் கியோமர் அமதி, யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார். புதிய ஆயர் முதல் நிகழ்வாக, மறைந்த ஆயர் புறோ அமதி, அவர்களின் நீண்டகால எதிர்பார்ப்பாகிய மருதமடு மாதாவின் புதுமைமிகு திருச்சுரூபத்திற்கு முடி சூட்டும் நிகழ்வை 02 யூலை 1924 மிக விமரிசையாகச் சிறப்பாக நடத்தினார். இச்சடங்கில் நேரடியாகப் பங்கு கொண்ட ஒருவர் தமது அனுபவத்தைக் கீழ்க்கண்டவாறு தமது நூலில் பதிவு செய்துள்ளார்.

(தொடர்ச்சி 06ம் பக்கம்)

# மருதமடு மாதாவின் திருச்சொரூப முடிசூட்டு நிகழ்வும் அதன் பின்புலமும்

(05ம் பக்கத் தொடர்ச்சி)

02 யூலை 1924 இலங்கைக் கத்தோலிக்கருக்குப் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும். இத்தினத்தில் மருதமடு மாதாவின் திருச்சுரூபத்திற்கு மணிமுடி சூட்டும் சடங்கு மிகவும் விமரிசையாகவும் ஆடம்பரமாகவும் நடந்தேறியது.

இதனால் இலங்கைத் திருஅவைக்குக் கிட்டிய மங்காப் புகழ் ஒருபுறமிருக்க, உலகிலுள்ள சிறந்த திருத்தலங்களில் ஒன்றாக மடுத் திருத்தலமும் அங்கீகாரம் பெறுகின்றது. உலகில் மரியன்னையின் சிறந்த திருத்தலங்களில் ஒன்றாக மருதமடுவை அங்கீகரித்ததன் மூலம், திருத்தந்தை இலங்கைக்குச் சிறப்பான கௌரவத்தை அளித்துள்ளார். உலகில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான திருத்தலங்களே இவ்வாறாக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

02 யூலை 1924 இல் கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் அன்ரனி கூடே அமதி, திருத்தந்தை 11ஆம் பயஸ் அவர்களின் பிரதிநிதியாக, ஏனைய ஆயர்களுடன் பெரும் எண்ணிக்கையிலான குருக்களுடனும் துறவிகளுடனும் இணைந்து, இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் வந்திருந்த பெரும் மக்கள் கூட்டத்தின் முன்னிலையில் புதுமைமிகு திருச்சுரூபத்துக்கு மணிமுடி சூட்டினார்.

அண்ணளவாக 300 ஆண்டுகளுக்கு மேலாக ஒதுக்குப் புறமான வன்னிக் காட்டுப் பகுதியில் சிறு கொட்டில் ஆலயத்தில் வணாங்கப்பட்டு வந்த புதுமைமிகு திருச்சுரூபம் இன்று பொன்னாலும், வெள்ளியாலும் பளபளக்கும் நவரத்தினக் கற்களாலும் அலங்கரிக்கப்பட்டுக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இந்த நிகழ்வு சுட்டி நிற்கும் ஆன்மீக அடையாளம் ஆழமான பொருள் பொதிந்த நிகழ்வாக விளங்குகிறது. இந்த வரலாற்று நிகழ்வானது மக்களின் விசுவாசத்தின் வெளிப்பாடாக விளங்குகின்றது.

திருவிழாவிற்கு முதல் நாள் அதாவது01 யூலை 1924 மாலை இடம்பெற்ற வேஸ்பர் ஆராதனையில் அண்ணளவாக 100,000 மக்கள் கலந்து சிறப்பித்தனர். இதில் கண்டி ஆயர் பீட்பீக் மேயர் சிங்கள மொழியில் ஆற்றிய மறையுரை பெரிதும் பாராட்டப்பட்டது. கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் மாலை வழிபாட்டைத் தலைமையேற்று நடத்தினார். யாழ்ப்பாண மறைமாவட்ட அருட்தந்தையர்களும் ஏனைய மறை மாவட்டங்களிலிருந்து வருகை தந்த அருட்தந்தையர்களும் கலந்து மாலை வழிபாட்டைச் சிறப்பித்தனர். வழிபாடு முழுவதும் இலத்தீன் பாடல்களாக அமைந்திருந்தன.

மறுநாள் அதாவது 02 யூலை காலைத் திருப்பலி ஆரம்பமாவதற்கு முன்பு மருதமடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபம் ஆடம்பரமாகப் பவனியாக எடுத்து வரப்பட்டு இதற்கென அலங்கரிக்கப்பட்ட மேடையிலுள்ள பீடத்தில் பூசிதமாக வைக்கப்பட்டது. கண்டி ஆயர் பீட் பீக் மேயர் தலைமையேற்றுத் திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். திருவிழாத் திருப்பலியைத்தொடர்ந்து மணிமுடி சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்புப் பேராயர், ஏனைய ஆயர்கள், அமலமரித்தியாகிகள்சபையின் பிரதித் தலைவர் (Assistant Superior General) மற்றும் ஏனைய பெரும் எண்ணிக்கையிலான குருக்களும் கலந்து கொண்டனர். திருப்பலியின் போது தூத்துக் குடி மறைமாவட்ட ஆயர் திபூசியஸ் பீரிஸ் தமிழ்மொழியில் மறையுரையாற்றினார்.

தொடர்ந்து பேராயர் சிங்கள மொழியில் மறையுரையாற்றினார். கொழும்புப் பேராயர், யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை, மற்றும் தூத்துக்குடி ஆயர்கள் மற்றும், ஏனைய குருக்கள் இரு முடிகளையும் பவனியாக எடுத்து வந்தனர். ஆயருக்குரிய சிறப்பு விருதணிகளுடன் வருகை தந்த பேராயர் சிறிய முடியைக் குழந்தை இயேசு திருச்சுரூபத்தின் தலையிலும் பெரிய முடியை மருதமடு அன்னை திருச்சுரூபத்தின் தலையிலும் சூட்டிய போது வானைப் பிளக்கும் அளவிற்கு வெடிச்சத்தங்களும், ஆலய மணியோசையும், மக்களின் மகிழ்ச்சி ஆர்ப்பரிப்பும், ஆரவாரங்களும் நெடு நேரம் நீடித்தது.பெரிய முடியானது, நகை ஆபரணங்களை அழகுற வடிவமைப்பதில் சிறப்பு அனுபவம் பெற்ற திறமையுள்ள பொற்கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டது. முடியில் பொறிக்கப்பட்டிருந்த சிலுவை பளபளப்பான தோற்றத்தில் காட்சியளித்தது. முடி முழுவதும் தூய தங்கத்தினால் செய்யப்பட்டதாகும். முடியின் அடிமட்டம் மற்றும் முன் பகுதி இரத்தினம், மாணிக்கம் போன்ற உயர் பெறுமதியுள்ள கற்களினால் அழகுபடுத்தப்பட்டிருந்தது. பொதுவாக இவ்வாறான நிகழ்வுகளின் போது திருத்தந்தையின் அந்நாட்டிற்கான பிரதிநிதியே மணிமுடி சூட்டும் நிகழ்வை நடத்துவார். எனினும் இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதி அவ்வேளையில் இல்லாத நிலையில், கொழும்புப் பேராயருக்கு இச்சிறப்புரிமை திருத்தந்தையினால் வழங்கப்பட்டது.

(S. Joseph Fernando, 1924 &1938, 20-23).

## மணிமுடிசூட்டு நிகழ்வின் வெள்ளி விழா - 1949

முடிசூட்டு வெள்ளி விழாவைச் சிறப்பிக்கவும், ஆயர் கியோமர் அமதி அவர்களின் ஆயர் பணியின் வெள்ளி விழாவைச் சிறப்பிக்கவும் ஆயர் ஜே. எமிலியானுஸ்பிள்ளையின் வேண்டுகோளில் "The Chronicle of the Sanctury of Our Lady of Madhu" என்னும் வரலாற்று நூலை அருட்தந்தை ஏ.ஜே.பி. அன்ரனயினஸ் அமதி அடிகள் எழுதி, 1949இற்கு முன் வெளியிட எண்ணிய போதும் நூலின் ஆக்கப் பணி 1956ம் ஆண்டிலேயே நிறைவு பெற்றது.

02 யூலை 1949இல் மருதமடுச் செபமாலை மாதா புதுமைமிகு திருச்சுரூபத்தின் மணிமுடிசூட்டு விழாவின் வெள்ளி விழாக் கொண்டாடப்பட்டது. மடுத்திருப்பதியில் பெரும் திரளான மக்கள் கூடியிருந்தனர். திருப்பதி முழுவதும் மக்கள் அமைத்த விடுதிகளால் நிறைந்திருந்தது. இவ்வாறு கூடிய மக்கள் தொகை பத்திரிகைக் கணிப்பின்படி 125,000 எனவும், காவற்துறை மற்றும் மன்னார் அரச அதிபரின் கணிப்பின்படி 150,000 எனவும் மதிப்பிடப்பட்டது.

யூபிலி ஆண்டு திருவிழாவினைச் சிறப்பிக்க சில விசேட நிகழ்ச்சிகளும், வழிபாடுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டன. 29 யூன் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான மரியன்னையின் திருச்சுரூபப் பவனி திருப்பதியின் எல்லாப் பாதைகள் ஊடாகவும் நடத்தப்பட்டது. பவனியின் போது மக்கள் திருச் செபமாலை மற்றும் பிரார்த்தனையைச் செபித்து புகழ்ச்சிப்பாடல்களைஇசைத்துத் தங்கள் வணக்கத்தையும் பக்தியையும் வெளிப்படுத்தினர். மேலும் இரண்டு இரவுகள் 10 மணி முதல் 12 மணி வரையும் இடம்பெற்ற சிறப்பு மரியன்னை வழிபாட்டின் போது திருச் செபமாலையின் மறை உண்மைகள் விளங்கப்படுத்தப்பட்டு, திருமணித்தியாலமும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

முடிசூட்டும் வெள்ளி விழாவைச் சிறப்பிக்க இலங்கையின் எல்லா ஆயர்களும் 30 யூன் முதல் யூலை முதலாம் திகதி வரையும் திருப்பதியில் தங்கியிருந்தனர்.

எனினும் திருமலை - மட்டு நகர் ஆயர் பேரருட்திரு இக்னேசியஸ் கிளனி யே.ச, அமெரிக்கா சென்றிருந்த காரணத்தினால் இவர் மட்டும் கலந்து கொள்ளவில்லை. கொழும்புப் பேராயர் தலைமையில் இடம் பெற்ற வேஸ்பர் வழிபாடு வானொலி மூலமாக ஒலிபரப்புச் செய்யப்பட்டது. வேஸ்பர் வழிபாட்டைத் தொடர்ந்து திருவிழாவிற்கு வந்திருந்த எல்லா ஆயர்களும் ஒரே நேரத்தில் பக்தர்கள் அனைவருக்கும் இறை ஆசீரை வழங்கினர்.

திருவிழாவின் அனைத்து நிகழ்வுகளும் எவ்வித தங்குதடையுமின்றி சிறப்பாக இடம்பெற்றன. மக்கள் ஒழுங்கைப் பேணிக் கட்டுபாட்டுடன் நடந்து கொண்டமை பற்றிக் காவற்துறையினரும் தங்கள் பாராட்டை வெளிப்படுத்தினர். மேலும் திருத்தலத்தில் பல்வேறு பணிகளுக்குப் பொறுப்பாயிருந்த ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் கடமையைத் திருப்திகரமான முறையில் செயற்படுத்தியிருந்தனர். திருவிழா நாட்களில் குறிப்பாக ஆன்மீகம் சார்பான உதவிகளை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மறை மாவட்டங்களிலிருந்து 60 அருட்தந்தையர்கள் வந்திருந்தனர். இதுவரையும் மடுத் திருப்பதியில் இடம்பெற்ற அனைத்துத் திருவிழாக்களிலும் இத்திருவிழாவே மிகச்சிறப்பான திருவிழாவாக அமைந்திருந்தது என்னும் கருத்து முன்வைக்கப்பட்டது. திருப்பயணிகளும் தாம் இதுவரையும் மடுத்திருப்பதியில் கழித்த நாட்களை விட இத்திருவிழாவின் போது கழித்த நாட்களே மிகவும் திருப்திகரமான நாட்களாக அமைந்திருந்ததாகத் தங்கள் கருத்தை வெளிப்படுத்தினர் (Madhu Codex II, 41).

## மணிமுடிசூட்டு நிகழ்வின் பொன்விழா - 1974

1924இல் நடந்தேறிய மணி முடிசூட்டு நிகழ்வின் 50வது ஆண்டு நிறைவு 1974இல் யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் ஏப்ரல், மே மாதங்களில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதற்கு முன் ஆயத்தமாக ஆயர் தியோகுப்பிள்ளை தலைமையில் கூடிய யாழ்ப்பாண மறை மாவட்டக் குருக்கள்மன்றில் (Senate) மருதமடு மாதாவின் திருச்சுரூபத்தை மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளுக்கும் மக்கள் வணக்கத்திற்கு எடுத்துச்செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இத்திட்டத்தை முன் நின்று செயற்படுத்தும் பணி குரு முதல்வர் அருட்பணி எஸ்.ஏ.மைக்கல்சாமி அமதி தலைமையில் குருக்களை உள்ளடக்கிய சிறு குழுவிடம் கையளிக்கப்பட்டது. குழுவினரின் ஏற்பாட்டில் மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் முன்னாயத்தமாக மூன்று நாள் சிறப்பு வழிபாடுகள், மறையுரைகள், ஒப்புரவு அருளடையாளம், திருப்பலி என ஆன்மீக ஆயத்தங்களும், ஆலயத்தையும் பாதைகளையும் அலங்கரித்தல் ஆகிய ஆயத்தங்களில் மக்கள் முழு ஈடுபாட்டுடன் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

பங்கிற்கு ஒதுக்கப்பட்ட நாளில் மாலையில் புதுமைமிகு திருச்சுரூபம் விமரிசையாக வரவேற்கப்பட்டுச் சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதில் அயற் பங்குகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டனர். மறுநாள் மாலை வரையும்புதுமைமிகு திருச்சுரூபம் மக்கள் வழிபாட்டிற்கு அதே பங்கில் வைக்கப்பட்ட நிலையில், மக்கள் இரவிலும் காலையிலும் குழுவாகவும் தனியாகவும் வழிபாடு நடத்தினர். இந்த நாட்கள் மறைமாவட்டத்திற்கும், பங்குகளுக்கும் ஆன்மீகப் புதுப்பித்தலோடு கூடிய அருட்பொழிவின் காலமாக விளங்கியது.

## மணிமுடிசூட்டு நிகழ்வின் பவளவிழா - 1999

திருச்சுரூபத்தின் முடிசூட்டு நிகழ்வின் 75வது ஆண்டு 1999 ஆகும். எனினும் இந்நிகழ்வு கிறிஸ்து பிறப்பின் மாபெரும் யூபிலி ஆண்டாகிய 2000 ஆண்டில் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி 2000, 23 மே முதல் 19 யூன் வரையும் மன்னார் மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளுக்கும் புதுமைமிகு திருச்சுரூபம் எடுத்துச் செல்லப்பட்டு, ஒரு நாள் முழுவதும் குறிப்பிட்ட பங்கு மக்கள் வேண்டுதல் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. முன் ஆயத்தமாக எல்லாப் பங்குகளிலும் மறையுரைகளும், வழிபாடுகளும் ஒழுங்கு செய்யப்பட்டு மக்கள் ஆன்மீக நிலையில் தயார் செய்யப்பட்டனர். குரு முதல்வர் அருட்பணி சேவியர் குரூஸ் தலைமையில் இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளச் சிறப்பான குழுவினர் நியமிக்கப்பட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

## மணிமுடிசூட்டு நிகழ்வின் நூற்றாண்டு விழா - 2024

மணிமுடிசூட்டு நிகழ்வின் நூற்றாண்டு விழா 07 யூலை 2023 அன்று, மடுத் திருப்பதியில் மன்னார் ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் கொடி ஏற்றி ஆரம்பிக்கப்பட்டது. நூற்றாண்டின் முக்கிய செயற்பாடாக மடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபம் மன்னார் மறை மாவட்டத்தின் அனைத்துப் பங்குகளுக்கும், யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் பங்குகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. மடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபம் மன்னார் மறை மாவட்டத்தில், மன்னார், முருங்கன், மடு, வவுனியா ஆகிய நான்கு மறைக்கோட்டங்களிலுள்ள 41 பங்குகளுக்கும் முதல் கட்டமாக 07.01.2024 முதல் 26ஆம் திகதி வரையும், இரண்டாம் கட்டமாக மாந்தை மறைக் கோட்டத்தைச் சேர்ந்த 07 பங்குகளுக்கும் 02.04.2024 முதல் 05.04.2024 வரையும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்டது. 06.04.2024 முதல் 30.04.2024 வரையும் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது.

மன்னார் மற்றும் யாழ்ப்பாண அனைத்துப் பங்குகளும், மடு அன்னையின் திருச்சுரூபத்தை கோலாகலமான வீதி, ஆலய அலங்காரங்களுடனும் தீப, தூப, மலர், கும்ப ஆராத்திகளுடனும் கொடிகள், பதாதைகள், வாயில் பந்தல் அலங்காரங்களுடனும் ஆடல் பாடல்கள், பாண்ட் வாத்திய இசைகளுடனும், சில இடங்களில் நாதஸ்வர மேளதாளத்துடனும் வரவேற்று மகிழ்ந்தனர். இதற்கு மக்கள் பங்குத்தந்தையர்களால் ஆன்மீக நிலையில் நன்கு தயார் செய்யப்பட்டிருந்தனர். இறைமக்கள் ஆன்மீக எழுச்சியுடன் இறைவேண்டல் செய்து, திருப்பலி ஒப்புக்கொடுத்து கண்ணீர் மல்க வேண்டுதல் செய்தனர். மருத மடுசெபமாலைத் தாயாரின் பரிந்துரை வழியாக இறைமக்கள் பெற்றுக் கொண்ட இறையாசீருக்காகவும் நலன்களுக்காகவும் நன்றி கூறி வேண்டுதல் செய்தனர்.

இந்நிகழ்வுகளுக்காக அயராது உழைத்த மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி பி. கிறிஸ்துநாயகம், யாழ்ப்பாண மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி பி. ஜே.ஜெபரட்ணம் தலைமையிலான திருப்பயண ஏற்பாட்டுக் குழுவினர், மடுப் பரிபாலகர், உதவிப் பரிபாலகர்கள், மடு ஊழியர்கள், கலையருவி கத்தோலிக்க ஊடகப் பிரிவினர், யாழ் மறை அலை கத்தோலிக்க ஊடகப் பிரிவினர், மன்னார் மறைமாவட்ட நிலையங்களின் வாகனச் சாரதிகள் மற்றும் பங்குகளின் பங்குத் தந்தையர்களும், ஆர்வத்துடன் செயலாற்றிய பங்கு மக்களும், அனுமதி வழங்கிய மன்னார் ஆயர் மற்றும் யாழ்ப்பாணத்திற்கான ஒழுங்குகளை மேற் கொண்ட யாழ்ப்பாண ஆயரும் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

## முடிவுரை

1658களில் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியினர் கத்தோலிக்கருக்கு எதிராக மேற்கொண்ட நெருக்குவாரங்களின் விளைவாக, இலங்கைக் கத்தோலிக்க மக்களுக்குக் கிடைத்த மாபெரும் ஆசீரே மருதமடுத் திருத்தலமாகும். ஒல்லாந்தக் கலாபனையால் மாந்தையிலிருந்து இடம் பெயர்ந்தோருக்கு மடுக்கிராமம் புகலிடம் வழங்கிய நிகழ்வே மடுத்திருத்தலத்தின் தொடக்கமாக மாறியது. நீண்டகால பல சவால்கள் மத்தியில் சிறிது சிறிதாக வளர்ச்சி கண்ட இத்திருத்தலம் இன்று இலங்கையிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் அதிகம் பிரபல்யம் பெற்றுள்ளது. 1921இல் திருத்தந்தை வழங்கிய அங்கீகாரத்துடன் 1924இல் மருதமடு அன்னையின் புதுமைமிகு திருச்சுரூபத்திற்கு மணிமுடி சூட்டப்பட்டதன் நூற்றாண்டு இந்த வருடமாகும். 2015இல் திருத்தந்தை பிரான்சிஸ் திருத்தலத்தைத் தரிசித்தமை திருத்தலத்திற்குத் திருஅவை வழங்கிய மற்றுமோர் அங்கீகாரமாகும்.

படிப்படியாகப் பெரும் வளர்ச்சி கண்டு வரும் திருத்தலத்தை, வருடா வருடம் பல இலட்சம் மக்கள் தரிசித்து மருதமடு அன்னையின் பரிந்துரையையும், இறை ஆசீரையும் பெற்று உள்ளத்து அமைதி பெறுகின்றார்கள். இப்பின்னணியில் முடிசூட்டு நிகழ்வின் நூற்றாண்டின் நிகழ்வை முன்னிட்டு, மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்கள் திருத்தல ஆலயத்தை "பெருங்கோவிலாக" (Basilica) அங்கீகரிக்கும்படி, திரு ஆட்சிப் பீடத்திற்கு விடுக்கும் கோரிக்கைக்கு நாமும் ஆதரவு வழங்குவதுடன் மருதமடு அன்னையின் பரிந்துரையையும் வேண்டுவோம்.

நன்றி : மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு மலர்

# அருளாளர் கார்லோ அகுதீஸ் உட்பட 15 அருளாளர்கள் புனிதர் நிலைக்கு

அருளாளர் கார்லோ அகுதீஸ் உட்பட 15 அருளாளர்கள் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார். அருளாளர், மற்றும், புனிதர்களாக உயர்த்தப்படும் வழிமுறைகளை ஒருங்கிணைக்கும் பேராயத்தின் தலைவர் கர்தினால் மார்செல்லோ செமெராரோ அவர்கள், 15 அருளாளர்களின் வாழ்க்கை மற்றும் அற்புதங்கள் பற்றிய சுருக்கமான அறிக்கையை வாசித்தார்.

சிரியாவின் தமாஸ்கஸ் பகுதியில் 1860 ஆம் ஆண்டு அருட்பணி மனுவல் றூஸ் லூப் OFM, அவருடைய உடன் தோழர்கள் எழுவர், மூன்று உடன் சகோதரர்களான அடெல் மவுற்றி, பிரான்சிஸ், றக்பெல் மசாபிக் ஆகிய பதினொருவர் சிரியா போரில் மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்டனர்.

மேலும் இத்தாலியைச் சேர்ந்த அருளாளர் அருட்பணி குசேப் அலமனோ, அருட்சகோதரி இலினா கூறா, கனடா நாட்டைச் சார்ந்த அருள்சகோதரி மரிய லினிய பெரடிஸ் மற்றும் இளம்அருளாளரான கார்லோ அகுதீஸ் ஆகியோர் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படஉள்ளனர். அருள்பணி குசேப் அலமனோ, 20 ஆம் நூற்றாண்டில் கொன்சோலாத்தா சபையை நிறுவியவராவார்.

## 9வது ஆண்டு நினைவு

மலர்வு
01 . 04 . 1929



உதிர்வு
10 . 07 . 2015

### அமரர் சூசை யக்கோவா

" அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள்;
ஏனெனில் அவர்களின் செயல்கள்
அவர்களைப் பின் தொடரும்"
(தி.வெ.14 :13)

குடும்பத்தினர்

## 7ம் ஆண்டு நினைவு

மலர்வு
03 . 11 . 1941



உதிர்வு
05 . 07 . 2017

### அமரர் யோசேப் அகஸ்ரின்

(கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே
நாம் கொண்டுள்ள நம்பிக்கை)
உரோ 6 : 8

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை

## நீங்கா நினைவில் 4ம் ஆண்டு | நீங்கா நினைவில் 1ம் ஆண்டு





ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில்
மதிப்பிற்குரியது
(தி.பா 116:15)

அமரர்
### கந்தசாமி
மலர்வு - 14.01.1935
உதிர்வு - 2405.2020

நினைவுகளுடன்
உறவுகள்

அமரர்
### அன்னமலர்
மலர்வு - 26.07.1945
உதிர்வு - 2806.2023

AD-31

## 10வது ஆண்டு நினைவு

மலர்வு
16 . 03 . 1954



உதிர்வு
13 . 06 . 2004

### அமரர் ஈசாக் அந்தோனிப்பிள்ளை

மெழுகுவர்த்தி போல் உருக்கி நீங்கள்
எங்களை வாழவைத்தீர்கள் அப்பா உங்களை
நாங்கள் நன்றாக வாழவைக்கும் நேரத்தில்
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து விட்டீர்கள்
ஆண்டுகள் பத்து சென்றாலும்
ஆண்டவன் மடியில் அமர பிரார்த்திக்கின்றோம்

நீங்கா நினைவுகளுடன்
மனைவி (அருளம்மா)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## நீங்கா நினைவுகளுடன்...

'ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர் நம் கடவுளின் கோவில் முற்றங்களில் செழித்தோங்குவர்' (திருப்பாடல் 93:13)

### 33ம் ஆண்டு நினைவு



அமரர். மனவற்பிள்ளை
சில்வெஸ்டர்
பிறப்பு - 24.12.1931
இறப்பு - 22.01.1991

### 2ம் ஆண்டு நினைவு



அமரர்மேரி இமக்குலேட்
சில்வெஸ்டர்
பிறப்பு - 18.09.1938
இறப்பு - 10.06.2022

### 54ம் ஆண்டு நினைவு



அமரர். மிரியம் காமினி
சில்வெஸ்டர்
பிறப்பு - 06.10.1962
இறப்பு - 26.06.1970

'ஆண்டவரே உமது பேரிரக்கத்தால் இவர்களுக்கு முடிவில்லாத நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்'

சுருவில்
பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
12 . 11 . 1944



விண்ணில்
14 . 06 . 2024

### திரு.பஸ்ரியாம்பிள்ளை பொனவெஞ்சுர்
(ஓய்வு நிலை ஆசிரியர் - சென்பீற்றர் கல்லூரி கொழும்பு)

யாழ். குருநகரைப் பிறப்பிடமாகவும்
நீர்கொழும்பு - மற்றும் நியூசிலாந்தை
வசிப்பிடமாகவும் கொண்ட
திரு.பஸ்ரியாம்பிள்ளை பொனவெஞ்சுர்
14.06.24இல் காலமானார். அன்
னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக
நியூசிலாந்து - நீர்கொழும்பு - குருநகர் -
ஆனையூர் ஆலயங்களில் 13.07.24 சனிக்
கிழமை இரங்கல் திருப்பலிகள்
ஒப்புக்கொடுக்கப்படும்.

நிலாமுற்றம்
உயரப்புலம்
ஆனைக்கோட்டை

தகவல்
அருமைநாயகம் பிகாசி
(சகோதரி லண்டன்)

# முன்னாள் அதிபர் அமரர் ஜேக்கப் றோமான் அவர்களின் உருவச்சிலை புனரமைப்பு



குருநகர் சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் ஜேக்கப் றோமான் அவர்களின் புனரமைக்கப்பட்ட உருவச்சிலை திறப்புவிழா 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சென். ஜேம்ஸ் பெண்கள் கல்லூரியின் ஓய்வுநிலை உப அதிபர் திருமதி யூயின் யூலியஸ் அவர்களின் தலைமையில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில அமரர் ஜேக்கப் றோமான் அவர்களின் நினைவிடத்தில் உருவச்சிலை திறப்புவிழாவும் தொடர்ந்து குருநகர் கலாச்சார மண்டபத்தில் மாணவர் கௌரவிப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன. மாணவர் கௌரவிப்பு நிகழ்வில் 2022ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு, தையல், கேக் ஐசிங், சிகையலங்காரம் ஆகிய பிரத்தியேகமாக நடைபெற்ற கற்கைநெறிகளில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் மற்றும் கவிதை சிறுகதை ஆகிய கலைத்திறன் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் மக்கள் வங்கி ஓய்வுநிலை பிராந்திய முகாமையாளர் திரு. றோமான் புஸ்பராஜா அவர்கள் பிரதம விருந்தினராகவும் வைத்தியர் திரு. தவரெட்ணம் நிக்சன் திருமாறன் மற்றும் திரு. புஸ்பராசா நிறோசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பாண்டியன்தாழ்வுப் பங்குத்தந்தை அருட்தந்தை நேசராஜா மற்றும் குருநகர் பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து நிகழ்வை ச்சிறப்பித்தனர்.

# குமுழமுனைப் பங்கிலுள்ள நொச்சிமுனை ஆலயத் திறப்பு விழா





கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதிய ஆலயத்திறப்பு விழாவும் வருடாந்த த்திருவிழாவும் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை நிதர்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்துத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

1986ஆம் ஆண்டு மண்டைதீவிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து நொச்சிமுனைப் பிரதேசத்தில் குடியேறினர். இம்மக்கள் அப்பிரதேசத்தில் குடியேறியபோது தமது பங்கின் பாதுகாவலரான புனித இராயப்பரை நினைவுகூர்ந்து ஓர் ஆலயத்தை அங்கு நிறுவியிருந்தனர். தமக்கு புகலிடம் தந்து தம்மை அரவணைத்த அவ்விடத்தை நினைவுகூர்ந்து அதற்கு நன்றி செலுத்தும் முகமாகவும் மண்டைதீவு புனித இராயப்பர் ஆலயம் கட்டப்பட்டதன் 125ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டும் இப்புதிய ஆலயம் மண்டைதீவு மக்களால் அங்கு அமைக்கப்பட்டதாகும்.

# வட்டக்கச்சிப் பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கல்





வட்டக்கச்சிப் பங்கில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை சுலக்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 26ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. யாழ். ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் கல்மடு புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 115 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

# குருநகர்ப் பங்கினரால் முன்னெடுக்கப்பட்ட முதல்நன்மை பெறும் மாணவர்களுக்கான பாசறை



குருநகர் பங்கில் முன்னெடுக்கப்பட்ட முதல்நன்மை பெறவுள்ள பிள்ளைகளுக்கான பாசறை நிகழ்வு 29ஆம் திகதி கடந்த சனிக்கிழமை மாதகல் புனித லூர்து அன்னை கெபியில் நடைபெற்றது. குருநகர் பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களின் ஏற்பாட்டில் மறையாசிரியர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் 80 வரையான பிள்ளைகள் மாதகல் புனித லூர்து அன்னை கெபிக்குச்சென்று அங்கு முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகளில் பங்குபற்றினர்.

# நாவாந்துறைப் பங்கில் முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



நாவாந்துறை பங்கில் சிறார்களுக்கான முதல் நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை யேசுரட்ணம் அவர்களின் தலைமையில் அருட் சகோதரி நிஷா மற்றும் மறையாசிரியர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவ கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை யஸ்ரின் அவர்களின் தலைமையில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 43 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தை பெற்றுக்கொண்டனர்.

# ஒட்டகப்புல பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கல்



ஒட்டகப்புலம் பங்கில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை அருள்தாசன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் அமல உற்பவ அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 36 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தை ப்பெற்றுக்கொண்டார்கள்.

# கிளிநொச்சி புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா



கிளிநொச்சி புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. 04ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 12ஆம் திகதி புதன்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை குருநகர் பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை சகாயநாயகம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

# புதுக்குடியிருப்புப் பங்கில் முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



புதுக்குடியிருப்புப் பங்கில் முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலய அதிபர் அருட்தந்தை றொபின்சன் ஜோசப் அவர்களின் தலைமையில் புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 32 பிள்ளைகள் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

# நவாலிப் பங்கில் முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



நவாலிப் பங்கில் முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 22ஆம்திகதி சனிக்கிழமை நடைபெற்றது. அமலமரித் தியாகிகள் சபை அருட்தந்தை கரோவ் அவர்களின் தலைமையில் நவாலி புனித பேதுரு பவுல் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் 09 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

# யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் 2025ஆம் கல்வியாண்டிற்குரிய தரம் ஒன்று மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

2019ஆம் ஆண்டு மாசி மாதம் முதலாம் திகதியிலிருந்து 2020ஆம் ஆண்டு தை மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாமெனவும் விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரி நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச்சான்றிதழ் மற்றும் புகைப்படத்தை இணைத்து ஆவணி மாதம் 16ஆம் திகதிக்கு முன்பாக அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் மாணவர்களுக்கான அனுமதிப்பரீட்சை ஆவணி மாதம் 31ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமெனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலய வருடாந்தத் திருவிழா

அருட்தந்தை யேசுதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 23ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை குருநகர் பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு ஆடி மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.